ஈரம் வழிகிறது
எரிமலைகளின் நினைவுகளில்
தமிழீழம் மலர்கிறது
கடற் கரும்புலிகளின் உதிர்வுகளில் 2

ஆவிய உரைகள் பனை உரைகள்
அழகிய சிலைகள் கடலலைகள்
தேனினினும் இனிது கடல் சுவைகள்
பாரினில் இதுவே உயர் நிலைகள் 2

அருகினில் இருந்த தீரமே
அட அழந்திட முடியா வீரமே
விடியலின் நல்ல நேரமே
எங்கள் மாலிகா ஈழமண் ஆரமே
கடலினுள் புயலென அவள் சென்றாள்
கடற் பகையினை கரும்புலி அவள் வென்றாள்
கருமலை துறை முக அலைகளிலே
அவள் திருமுகம் தினம் தினம் தெரிகிறதே

அன்பினில் வரைந்த கோலமே
பகை வென்றிடா ஓயா மானமே
அண்ணனின் ரகசிய வானமே
எங்கள் நல்ல முத்து புலி மகள் தீரமே
பகையினுள் புதிரென வெடி மலர்கள்
இவர் கடலினை மனதிட்ட கருந்தளிர்கள்
பிள்ளையின் அலைதொட மனதினிலே
தேச விடியலின் வேர்கள் தெரிகிறதே

ஈரம் வழிகிறது
எரிமலைகளின் நினைவுகளில்
தமிழீழம் மலர்கிறது
கடற் கரும்புலிகளின் உதிர்வுகளில் 2